தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வடசென்னைப் பகுதியில்

712 குடியிருப்புதாரர்களுக்கு வீடுகள் ஒதுக்கீட்டு ஆணை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, பிப். 20 - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.2.2025) சென்னை, டிக்காஸ்டர் சாலையில் அமைந்துள்ள டான் போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சந்திரயோகி சமாதி, ராதா கிருஷ்ணபுரம் மற்றும் சத்தியவாணி முத்துநகர் ஆகிய திட்டப் பகுதிகளில் 712 குடியிருப்புதாரர்களுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டு வசதியினை ஏற்படுத்தி தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வீட்டு வசதி வாய்ப்புகள் மட்டுமே போதுமானதாக இருக்காது. அவர்களுக்கு குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற போதுமான நகர்ப்புற வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசால் பல்வேறு திட்டங்கள் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்று முதல், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 5059.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 23 மாவட்டங்களில் 131 இடங்களில் 44,609 அடுக்குமாடி குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டு, 55,898 பயனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அடுக்குமாடி குடியிருப்புகள் மறுகட்டுமானம் செய்யும் சமயத்தில் அங்குள்ள குடும்பங்கள் சில மாதங்களுக்கு வேறு இடங்களில் தங்குவதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசின் மூலம் வழங்கப்பட்டு வந்த ஒரு குடும்பத்திற்கான மறுகுடியமர்வு கருணைத் தொகை ரூ.8000/த்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.24,000 என்று உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 10,081 குடும்பங்களுக்கு கருணைத் தொகையாக 23.96 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், "நம் குடியிருப்பு நம் பொறுப்பு" என்ற புதிய திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார். இத்திட்டத்தின் மூலம் குடியிருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு அடுக்குமாடி கட்டிடங்களில் வழக்கமான பராமரிப்பு மற்றும் சிறிய பழுதுப் பார்புகளை மேற்கொள்ள பராமரிப்பு கட்டணத்திற்கு இணையான மானியத்தை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. இதுவரை 694 சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு இதில் 558 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு இணை மானியமாக 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சந்திரயோகி சமாதி திட்டப்பகுதியில் 240 அடுக்குமாடி குடியிருப்புகளையும், சத்தியவாணி முத்துநகர் திட்டப்பகுதியில் 438 அடுக்குமாடி குடியிருப்புகளையும், எழும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ராதா கிருஷ்ணபுரம் திட்டப்பகுதியில் 168 அடுக்குமாடி குடியிருப்புகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 29.10.2024 அன்று திறந்து வைத்தார். இதில் மறுகட்டுமான பயனாளிகளான சந்திரயோகி சமாதி திட்டப் பகுதியில் 160 குடியிருப்புதாரர்களுக்கும், சத்தியவாணி முத்துநகர் திட்டப் பகுதியில் 384 குடியிருப்புதாரர்களுக்கும் மற்றும் ராதாகிருஷ்ணபுரம் திட்டப் பகுதியில் 168 குடியிருப்புதாரர்களுக்கும், என மொத்தம் 712 மறுகட்டுமான குடியிருப்புதாரர்களுக்கு ஒதுக்கீடு ஆணைகளை தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் வழங்கினார்.

ஏழை எளிய மக்களின் பொருளாதார நிலையினை கருத்தில் கொண்டு, சந்திரயோகி சமாதி திட்டப்பகுதி மறுகட்டுமான பயனாளி பங்களிப்பு தொகையான 83 ஆயிரம் ரூபாயினை, 20 வருட மாதத் தவணையில் எளிய முறையில் பங்களிப்பு தொகை செலுத்த ரூ.500 என்று நிர்ணயம் செய்தும், ராதா கிருஷ்ணபுரம் மற்றும் சத்தியவாணி முத்துநகர் ஆகிய திட்டப்பகுதிகளின் மறுகட்டுமான பயனாளி பங்களிப்பு தொகையான 1.50 லட்சம் ரூபாயினை 20 வருட மாதத் தவணையில் எளிய முறையில் பங்களிப்பு தொகை செலுத்த ரூ.625 என்று நிர்ணயம் செய்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி,

இ.பரந்தாமன், அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.பிரபாகர், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புதிய கல்விக் கொள்கை திணிப்பை எதிர்த்து ஒன்றிய அரசைக் கண்டித்து விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தை தலைவர் பொன்குமார் தொடங்கி வைத்து கண்டன உரையாற்றினார்.

புதிய கல்விக் கொள்கை திணிப்பு - ஒன்றிய அரசைக் கண்டித்து

விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி கண்டன ஆர்ப்பாட்டம்!

தலைவர் பொன்குமார் கண்டன உரை!

சென்னை, பிப். 20 - புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் மும்மொழி திட்டத்தை நடைமுறைப் படுத்த ஒன்றிய மோடி அரசு முயற்சித்து வருகிறது. இரு மொழி கொள்கையை பின்பற்றி வரும் தமிழ்நாடு அரசு எக்காரணத்தைக் கொண்டும் மும்மொழி ஏற்றுக் கொள்ளாது என மறுத்துவிட்டது. இதனால் தமிழ்நாடு அரசுக்கு கல்வி நிதியாக ஒதுக்கப்பட வேண்டிய 2,150 கோடி ரூபாயை ஒன்றிய அரசு ஒதுக்கிடவில்லை.

இது குறித்து கேட்டதற்கு ஒன்றிய கல்வி அமைச்சர் மும்மொழிக் கொள்கை திட்டத்தை ஏற்றுக் கொண் டால் தான் அதாவது இந்தி, சமஸ்கிருத மொழியை கற்பதாக உறுதி அளித்தால்தான் நிதி வழங்கப்படும் என்று ஆணவத்தின் வெளிப்பாடாக அறிவித்தார்.

இதனை தமிழ் நாட்டில் உள்ள அனைத்து கட்சிகளும் கண்டித்து வரு கின்றன.

இந்த நிலையில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் கள்ளக் குறிச்சியில் 17.02.2025 அன்று ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் மு.வெங்கடேஷ் தலைமை தாங்கினார். மாநில மகளிரணி செயலாளர் ஏ.சித்ரா முன்னிலை வகித்தார்.

தலைவர் பொன்குமார் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து, கண்டன உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெகதீசன், தொழிற்சங்க கூட்ட மைப்பின் பொதுச் செயலாளர் கவிஞர் குருநாக லிங்கம், அமைப்பு செயலாளர் நாகராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசின் ஆணவப் போக்கை கண்டித்து தொடர் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இறுதியாக ஊடகவியலாளர் மத்தியில் தலைவர் பொன்குமார் மத்திய அரசுக்கு விவசாயி கள் தொழிலாளர்கள் கட்சியின் கண்டனத்தை பதிவு செய்தார்.

இந்த நிகழ்ச்சியில் அதாவது 10 மணி நேரத்தில் ஏற்பாடு செய்த திடீர் ஆர்ப்பாட்டத்தில் சுமார் 500 பேர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களிட்டது சிறப்பு மிக்க ஒன்றாகும்.

பரவை முரசொலி முகவர் சி.கோவிந்தராஜ் - ஜி.செல்வி இல்ல மணவிழா!

ஜி.பி.ராஜா, பி.இராமநாதன், கழகத்தினர் வாழ்த்தினர்!

மதுரை, பிப். 20 - மதுரை மாவட்டம் பரவை முரசொலி முகவர் சி.கோவிந்தராஜ் - ஜி.செல்வி இணையரின் மகன் வழக்கறிஞர் ஜி. மதுசூதனன், மதுரை கே. மணிகண்டன் - சாந்தலட்சுமி இணையரின் மகள் செல்வி எம்.உமா மகேஸ்வரி ஆகியோரின் மணவிழா (16.2.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணிக்கு வாடிப்பட்டி ஸ்ரீ கிருஷ்ண மஹாலில் நடைபெற்றது.

திருமண விழாவை மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி. பி. ராஜா ,பி. ராமநாதன் ஆகியோர் தலைமையேற்று நடத்தினர். மணவிழாவில் ஏ.பழனிசாமி, வி.எழிலரசன், என்.எஸ். கார்த்திகேயன், டி.சிவானந்தம், ஜி.காளீஸ்வரன், துரை சரவணன், துரை அன்புச்செல்வன், கே.மணிகண்டநாயுடு, எம். சாந்தலட்சுமி, சி.கோவிந்தராஜ், ஜி.ஹரி (எ) பாலகுருநாதன், ஜி. முனிசாமி, எஸ்.ஜோதி, வெங்கடேசன், ஜெ. ரேணுகா உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். திருமண வரவேற்பு நிகழ்ச்சி (15.2. 2025) சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெற்றது.

பாளையங்கோட்டை குலவணிகர் புரத்தில் கட்டப்பட்டுள்ள

இரயில்வே மேம்பாலத்திற்கு 'கலைஞர்' பெயரை சூட்ட வேண்டும்!

பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நெல்லை, பிப். 20 - நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றிய குழு கூட்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் கே.எஸ்.தங்கபாண்டியன் தலைமை யில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பாளையங்கோட்டை குலவணிகர்புரத்தில் Y வடிவ இரயில்வே மேம்பாலம் அமைக்கப்பட உள்ளது. அதற்கு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெயர் சூட்ட வேண்டும் என்று கூட்டத்தில் ஏக மனதாக தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டை ஒன்றிய குழுக் கூட்டம் ஒன்றிய குழு தலைவர் கே.எஸ்.தங்கபாண்டியன் தலைமையில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சங்கர் ராமன், நெல்லையப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. ஒன்றிய மேலாளர் முருகன் அறிக்கை வாசித்தார்.

நெல்லைக்கு கடந்த 7 ந்தேதி வருகை தந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் பேசுகையில் திருநெல்வேலி பாளையங்கோட்டை குலவணிகர்புரத்தில் Y வடிவ இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த பாலம் அமையக் கூடிய இடம் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்காக 62 நாட்கள் தனிமை சிறையில் இருந்த பாளையங்கோட்டை சிறைச்சாலை முன்பு பாலம் அமைகிறது. எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய நினைவை போற்றும் வகையில் அப்பாலம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படும் பொழுது அந்த பாலத்திற்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் பாலம் என்று அறிவித்திட பாளை ஒன்றிய குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது..

மேலும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ், ஒன்றிய குழு உறுப்பினர்கள் முன்னீர்பள்ளம் சரஸ்வதி, செல்வசங்கர்,ராமலட்சுமி, முருகன், குமரேசன்,நம்பிராஜன், தெய்வானை,கனகராஜ், ராமகிருஷ்ணன்,திருப்பதி மணிகண்டன்,ராஜாராம்,பூலம்மாள், சுடலை பாண்டி,பேச்சியம்மாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலந்தூர் பகுதிக் கழகக் கூட்டம்!

சென்னை, பிப். 20 – ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க. செயற்குழு கூட்டம் திங்கட்கிழமை மாலை, ஆலந்தூர் கற்பக விநாயகர் கோவில் மண்டபத்தில் பகுதி அவைத் தலைவர் வே.டில்லிபாபு தலைமையில், பகுதி நிர்வாகிகளான கோ. கோட்டீஸ்வரன், ஐ.அழகேசன், ஜெயா செல்வம், எம்.சையத் அபுதாகீர் ஆகியோர் வரவேற்பில் ஆலந்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் ஆலந்தூர். ப.குணாளன் ஆலோசனையுடன் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதிவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள்(BLA-2), கழகத் தோழர்கள், அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம்

மாவட்ட அவைத் தலைவர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்கள் மாவட்ட பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால்;

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, பிப்ரவரி 22 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை-18
நாள்- 18.02.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றி வரும் எஸ்.எம். மதுரா செந்தில் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு.கே.எஸ்.மூர்த்தி (1/125எப், குடி தெரு, கொத்தமங்கலம் அஞ்சல், பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் - 637213) **அவர்கள் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.**

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை-18
நாள்- 18.02.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி வேலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிக்கு முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விளையாட்டு உபகரணங்களை மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., ஊராட்சி மன்ற தலைவர்களிடம் வழங்கினார். இதில் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு ஒன்றிய குழு, பெருந்தலைவர் அமுதா ஞானசேகரன், துணை தலைவர் மகேஸ்வரிகாசி, மாவட்ட கவுன்சிலர்கள் ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூரில் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி நகர, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் மற்றும் பயிற்சிகூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் நடந்தது. இதில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் ஆ.கா.தருண், அன்பகம் இளமாறன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு கருத்துகளை எடுத்துரைத்து, சமூக ஊடக பயிற்சிகளை அளித்தார்கள். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். இக்கூட்டத்தில் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட துணை செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், மாவட்டப் பொருளாளர் கே.பி.ஆர். ஜோதிராஜன், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் எஸ்.ராஜேந்திரன், ம.அன்பழகன், க.உமாகன்ரங்கம், கே.ஆர்.திருப்பதி, கவிதா தண்டபாணி, வி.எஸ்.ஞானவேலன், கே.முருகேசன், கே.ஏ.குண சேகரன், டி.அசோக்குமார், அ.மோகன்ராஜ், த.முரளி, ஆ.செல்வராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வி.வி.கிரிராஜ், சி.செந்தில்குமார், நா.பெ.பிரபு, வி.தமிழ்மணி மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.